**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 434-2023**

**Prosecution witness : அ.சா. 8** **Date : 04.07.2025.**

| Name : பழனிசாமி | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தற்போது காவல் துறையில் பணியாற்றி ஒய்வு பெற்றுள்ளேன். கடந்த 2022ம் வருடத்தில் மேச்சேரி காவல் நிலையத்தில் பணியாற்றி சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வந்த போது கடந்த 02.08.2019ம் தேதியன்று இரவு நான் இரவு பணி காவலராக இருந்த போது பாரா காவலர் ரவிகுமார் என்பவர் எனக்கு போன் செய்து மேச்சேரி பஸ் நிலையித்தில் குடி போதையில் தகராறு செய்ததாக சொன்னார்.

2). நான் அங்கு சென்று பார்த்த போது தர்மராஜ் என்பவர் குடிபோதையில் முதல் நிலை காவலர் பாபு என்பவரிடம் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் குருசாமி என்பவரிடம் எதிரி தகராறு செய்து கொண்டிருந்தார். பொது மக்களிடம் கெட்ட வார்த்தை பேசி கொண்டே முதல் நிலை காவலர் பாபு என்பவரது முக்கின் மீது அடித்தார். சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் குருசாமி என்பவரது முக்கின் மீது அடித்தார். பிறகு கெட்ட வார்த்தையால் தேவடியா கண்டாரஓழி பையா என்று எங்களை பார்த்து திட்டினார். நாங்கள் முவரும் எதிரியை காவல் நிலையத்திற்கு அழைத்த சென்று உதவி ஆய்வாளடரிடம் ஒப்படைத்தோம். பாபு என்பவர் தனிஅறிக்கை காவல் உதவி ஆய்வாளரிடம் கொடுத்தார்.

3). ஆஜர் எதிரி தான் எங்களை அடித்தார் என்று சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். ஆய்வாளர் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

4). நான் மேச்சேரி பேருந்து நிலையத்திற்கு போகும் போது முனுசாமி மற்றும் பாபு இருவரும் அங்கு இருந்தார்களா என்றால் ஆமாம். வேறு காவலர்கள் அங்கு இருந்தார்களா என்றால் இல்லை. நான் போய் பாாத்த போது ஆஜர் எதிரி யாரிடம் பொதுமக்களிடம் என்ன பிரச்சனை செய்தார் என்றால் பொதுமக்களிடம் பிரச்சனை செய்யவில்லை. ஆனால் பொதுஇடத்தில் பிரச்சனை செய்தார். அதனால் தான் பொது மக்கள் யாரும் புகார் அளிக்கவில்லை என்றால் கொடுக்கவில்லை.

5). பொதுமக்கள் யாரும் புகார் கொடுக்காத காரணத்தினால் தான் எந்த வொரு தனிபட்ட சாட்சியை நான் விசாரிக்கவில்லை என்றால் ஆய்வாளர் தான் விசாரித்திருப்பார். அது பற்றி எனக்கு தெரியாது. நான் பார்க்கும் போது பொதுமக்கள் எவ்வளவு பேர் இருந்திருப்பார்கள் என்றால் 50 பேர் இருந்திருப்பார். நான் சம்பவ இடம் சென்ற போது நான் பொதுமக்களை விசாரித்தேனா என்றால் இல்லை.

6). நான் பார்க்கும் போது எதிரி இரண்டு போலிசாரை முக்கின் மீது அடிக்கும் போது பார்த்தேன் என்றால் ஆமாம். நான் என்ன செய்தேன் என்றால் நான் ஒன்றும் சொல்லவில்லை. எதிரி என்னை எதுவும் சொல்லவில்லை. எதிரி மது போதையில் நல்ல நிலைமையில் இருந்தாரா என்றால் மது மயக்கத்தில் இருந்தார்.

7). பொதுமக்கள் உதவியுடன் காவல் நிலையத்திற்கு அழைத்து செல்லும் போது யார் யார் என்ன செய்தார்கள் என்றால் குறிப்பிட்டு சொல்லமுடியாது. இந்த சம்பவம் பற்றி ஆய்வாளர் எங்கு வைத்து விசாரித்தார் என்றால் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார். வேறு யார் யார் விசாரித்தார் என்றால் எனக்கு தெரியாது. பொது மக்களை கெட்ட வார்த்தையால் திட்டியாதாக சொல்லபடும்

நிலையில் யாரை குறிப்பிட்டு திட்டினார் என்று சொல்லமுடியுமா என்றால் குறிப்பிட்டு சொல்லமுடியாது.

8). குடி போதையில் இருந்ததது குறித்து மருத்துவ பரிசோதனை செய்தார்களா என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. எதிரிக்கு குடிபழக்கமே இல்லை என்றும், மேச்சேரி பேருந்து நிலையத்தில் சேர்மன் மகன் ராஜா என்பவருக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றும், அரசியல் காரணமாக எதிரியை அழைத்து சென்று பொய் வழக்கு போடபட்டுள்ளது என்றால் இல்லை.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2

மேட்டூர்.